கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.7/2024
இன்
அசல் வழக்கு எண்.40/2021
* * * *

சாந்தி ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. ராசு
2. புஷ்பம் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது 29.07.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.திருப்பதி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்திற்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 9 விதி 9ன் கீழ் கடந்த 07.08.2024ல் மனுதாரர்/வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கான O.S.40/2021ஐ திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.</u>**

1.1) இம்மனுவானது மனுதாரர்/வாதியால் கடந்த 07.08.2024ல் மனுதாரர்/வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கினை திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர்களின் மனுவினை ஆட்சேபனை செய்து எதிருரை தாக்கல் இல்லையென்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) தீர்வு:–</u>**

மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள்

யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் இம்மனுவினை நிரூபணம் செய்யும்பொருட்டு சாட்சி, சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

2.1) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது வாதி தரப்பில் விசாரணை செய்ய கடந்த 07.08.2024ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், இந்நிர் மனுதாரர்/வாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அசல் வழக்கில் அன்றைய தினம் ஆஜராக முடியவில்லை என்றும், எனவே மேற்படி மனுதாரர்/வாதியின் வருகையின்மையானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, அசல் வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்கவேண்டும் என்று மனுதாரர்/வாதி மனுவில் கூறியுள்ள காரணமானது சட்டப்படியானது என்பதை கருத்தில்கொண்டும், மேற்படி மனுதாரர்/வாதியால் மேற்படி 07.08.2024ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவினை ரத்து செய்யவேண்டும் என்ற இம்மனுவானது குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) மேலும், ஒரு வழக்கில் உள்ள பிரச்சனையை முழுமையாக

தீர்வு காண்பதற்கு இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்து, சான்றாவணங்கள் தாக்கல் செய்து வழக்கினை முழுமையாக விசாரணை செய்யும்பட்சத்தில் தான் வழக்கு தரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்சனைக்கு முழுமையான தீர்வு காண இயலும். எனவே, இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில்கொண்டும் மனு மற்றும் அபிவிட்டில் கண்டுள்ள காரணங்களை கருத்தில்கொண்டும், மனுதாரர்/வாதியின் மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 12.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.12 12:39:42 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.12 12:39:51 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.7/2024
இன்
அசல் வழக்கு எண்.40/2021
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 12.08.2025